# பகுதி - 4

## செயலாக்க அமைப்பை சீரமைத்தல்

| | |
|---|---|
| பிரிவு 1. | அமைப்பு |
| பிரிவு 2. | உள்ளாட்சி மன்றங்களின் செயல்பாடுகள் (Functions) |
| பிரிவு 3. | அதிகாரங்கள் வழங்குதல் (Devolution of Functions) |
| பிரிவு 4. | பணியாளரமைப்பு முறை |
| பிரிவு 5. | மனித வளமேம்பாடு மற்றும் பயிற்சி |
| பிரிவு 6. | உள்ளாட்சி நிருவாகத்தில் சமுதாயப் பங்கேற்பு |
| பிரிவு 7. | உள்ளாட்சி மன்றங்கள் – அதிகாரங்களின் போதுமான தன்மையும், நடைமுறைகளைச் சீரமைத்தலும் |
| பிரிவு 8. | கட்டுப்பாட்டு முறை |
| பிரிவு 9. | செயல்பாடு, பொறுப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ஏற்பாடு |
| பிரிவு 10. | உள்ளாட்சி மன்றங்களுக்கான புள்ளி விவரத் தகவல் அமைப்பு |

# பகுதி - 4

## செயலாக்க அமைப்பைச் சீரமைத்தல்

### பிரிவு – 1

### அமைப்பு

**4.1.01.** தற்போது இயங்கி வருகின்ற ஊரக, நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களின் விவரங்கள், மன்றங்களின் வகை வாரியாக கீழே தரப்பட்டுள்ளன.

| ஊரக உள்ளாட்சி மன்றங்கள் | | |
|---|---|---|
| (i) | ஊராட்சிகள் | 12,584 |
| (ii) | ஊராட்சி ஒன்றியங்கள் | 384 |
| (iii) | மாவட்ட பஞ்சாயத்துக்கள் | 28 |
| | மொத்தம் | 12,996 |

| நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் | | |
|---|---|---|
| (iv) | பேரூராட்சிகள் | 635 |
| (v) | நகராட்சிகள் | 104 |
| (vi) | மாநகராட்சிகள் | 6 |
| | மொத்தம் | 745 |
| | பெருமொத்தம் | 13,741 |

இம்மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் ஊரக உள்ளாட்சி மன்றங்கள் 58 சதவீத மக்கள் தொகையும், நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் 42 சதவீத மக்கள் தொகையும் கொண்டிருக்கின்றன.

**அமைத்தல்/திருத்தியமைத்தல்.**

**அ. ஊராட்சிகள்**

**4.1.02.** மதிப்பீட்டு மக்கள் தொகை 500க்குக் குறையாது கொண்ட ஒரு வருவாய்க் கிராமம் அல்லது கிராமங்கள் அல்லது ஒரு வருவாய்க் கிராமத்தின் யாதொரு பகுதி அல்லது தொடர்ச்சியான இரண்டு அல்லது மூன்று வருவாய்க் கிமங்களைச் சேர்ந்த பகுதி அடங்கிய ஒவ்வொரு உள்ளூர் பகுதிக்கும் 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவு 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவுப்படி ஊராட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு ஊராட்சியின் சராசரி மக்கள்தொகை 2583 ஆகும்.

**4.1.03.** 1920 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் சட்டத்தின்படி, ஊராட்சிகள் மேஜர், மைனர் ஊராட்சிகளென வகைப்படுத்தப்பட்டன. 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் விதிமுறைகளின்படி ஊராட்சிகள், நிலை I, நிலை II என வகைப்படுத்தப்பட்டன. எனினும் 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், ஊராட்சிகளை ஊராட்சிகள், பேரூராட்சிகள் என வகைப்படுத்தியது. மேஜர்/நிலை I ஊராட்சிகள், தற்போதைய பேரூராட்சிகளுக்கும், மைனர்/நிலை II ஊராட்சிகள், தற்போதைய ஊராட்சிகளுக்கும் சமமானவையாகும். தற்போதுள்ள விதிமுறைகளின்பட, ஒரு ஊராட்சியை அமைப்பதற்கு குறைந்தது 500 மக்கள்தொகை இருந்தால் போதுமானதாகும். நிதிவகையிலான வரம்பு ஏதும் வேண்டுவதில்லை. வளர்ச்சிப் பணிக்கான மற்றும் சட்டப்படிக்கல்லாத மானியங்கள் நீங்கலாக, ஐந்தாண்டு சராசரியின் (1989–90 முதல் 1993-94 வரை) அடிப்படையில், ஒரு ஊராட்சியின் சராசரி வரவு, செலவு முறையே ரூ.57,768/–, ரு.52,000/– ஆகும். ஒரு ஊராட்சியின் மாநில சராசரி ஆண்டு வரவும் செலவும் நியாயமான அளவில் இருப்பதாகத் தோன்றினாலும், பெரும்பாலான ஊராட்சிகளின் நிதி நிலைமை, அவை தங்கள் பகுதியில் குடிநீர் ஆதாரங்கள், தெரு விளக்குகள் போன்ற இன்றியமையாத அடிப்படை வசதிகளைப் பராமரிப்பதற்குக்கூட போதாத நிலையில்தான் உள்ளது. ஊராட்சியின் தனி நபர் மொத்த வருமானம் ரூ.35/- ஆகவும் ஊராட்சியின் தனி நபர் மொத்தச் செலவு ரூ.32/- ஆகவும் உள்ளது. தனிநபர் சொந்த வருமானம் ரூ.7/-. ஒப்படை செய்யப்பட்ட தனி நபர் வருமானம் ரூ.13/- . இதில் முத்திரைத்ததாள் தீர்வை மீதான தனிநபர் மேல்வரி மட்டும் ரூ.12/- ஆகும். தனி நபர் மொத்தச் செலவில், தனி நபர் நிருவாகச் செலவு ரூ.1.00 மட்டுமே ஆகிறது. ஊராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததே இச்செலவு குறைவிற்குக் காரணம் ஆகும். மக்கள் தொகை மற்றும் நபர்வாரி அடிப்படையில் ஊராட்சிகளின் ஆண்டு வரவு, செலவு விவரங்கள் இணைப்பு 89 மற்றும் 90ல் கொடுக்கப்பட்டுள்ளன. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 110 ஆம் பிரிவின்படி ஊராட்சிகளிடம் நிலை பெற்றுள்ள சட்டப்படிக்கான கடமைகளைச் செய்ய அதாவது, சாலைகள், தெருவிளக்கு வசதிகள், பொதுச் சுகாதார ஏற்பாடுகள், குடிநீர் வழங்கல் முதலிய பணிகளை ஆற்றுவதற்கு, ஒரு குறைந்த அளவிலான வருவாய் தேவைப்படுகிறது. ஆனால் இந்த அளவு, புவியியல் தன்மையின் அடிப்படையில் ஊராட்சிக்கு ஊராட்சி வேறுபடும்.

**4.1.04.** கீழ்மட்ட அளவில் ஜனநாயக அமைப்பு இருப்பது அவசியமாகும். 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் ரத்து செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் கொண்டு வரப்பட்டபோதிலும், ஊராட்சிகளை அமைப்பதற்கு நிர்ணயித்த மக்கள்தொகை குறித்த வரைமுறைகள், 1958 ஆம் ஆண்டு சட்டத்தில் உள்ளபடி அப்படியே உள்ளன. மொத்தமுள்ள 12,584 ஊராட்சிகளில் 53 ஊராட்சிகள் 500 வரை மக்கள்தொகை கொண்டுள்ளன. பெரும் எண்ணிக்கையிலான ஊராட்சிகள் (7629 ஊராட்சிகள்) 1001 – 3000 வரையிலான மக்கள்தொகையைக் கொண்டுள்ளன. மக்கள்தொகை வரம்பின்படியான (1991 மக்கள்தொகை) ஊராட்சிகளின் எண்ணிக்கை வருமாறு:

அட்டவணை 4.1 மக்கள்தொகை வரம்பின்படி ஊராட்சிகளின் எண்ணிக்கை

| மக்கள்தொகை வரம்பு எண்ணிக்கை | ஊராட்சிகள் எண்ணிக்கை |
|---|---|
| 500 வரை | 53 |
| 501 முதல் 1000 | 1,258 |
| 1001 முதல் 2000 | 4,811 |
| 2001 முதல் 3000 | 2,818 |
| 3001 முதல் 4000 | 1,583 |
| 4001 முதல் 5000 | 884 |
| 5000 க்கு மேற்பட்டவை | 1,177 |
| மொத்தம் | 12,584 |

4.1.05. ஒரு ஊராட்சியின் சராசரி மக்கள்தொகை 2583 ஆக உள்ளபடியால், ஊராட்சிகளை அமைப்பதற்கான 500 என்ற மக்கள்தொகை வரைமுறையைப் பின்பற்றினால், கிராமங்களை மேலும் பிரிக்க நேரிடுவதுடன் நிருவாகக் கண்ணோட்டத்திலும், சாலைகள், தெரு விளக்குகள், பொதுச் சுகாதாரம், குடிநீர் வழங்கல் முதலிய அடிப்படை வசதிகளை அளிக்கின்ற நோக்கிலும், நிர்வகிக்க முடியாதவை ஆகிவிடும்.

4.1.06. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பின்னணி பற்றிய தன்னுடைய அறிமுகக் குறிப்பில், தமிழ்நாடு அரசின் முன்னால் தலைமைச் செயலாளர் திரு. ஆர்.ஏ. கோபால்சாமி ஐ.ஏ.எஸ். அவர்கள், ஒரு ஊராட்சி 500 மக்கள்தொகையைக் கொண்டதாயிருக்க வேண்டும் என்ற நீக்குப்போக்கான விதிமுறை இருந்தபோதிலும் 1000–க்கும் குறைவான மக்கள்தொகையைக் கொண்ட ஊராட்சிகள் எவையும் அமைக்கப்படக்கூடாது என்பதை நிர்வாகக் கொள்கையாகக் கொள்ள வேண்டும் என்றும், ஆனால் அவ்வாறு அமைப்பதைத் தவிர்க்க இயலாதது எனில் இதுபற்றி அரசு மனநிறைவடைகின்ற வகையில் விபரம் எடுத்துரைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஊராட்சிகள் அமைப்பிற்கு தொடக்கநிலையில் வருமான வரம்பு எதுவும் வரையறுக்க இயலாது என்றபோதிலும், மக்கள்தொகை தொடர்பான, வரைமுறைகளைத் திருத்தியமைத்து திட்டஞ் சார்ந்த மற்றும் சமூக ரீதியான அடிப்படை வசதிகளை அளிக்க இயலும் வகையில், தேவையான நிதி ஸ்திரத்தன்மையை எற்படுத்தலாம்.

4.1.07. மாநில நிதி ஆணையம், ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு, வருங்காலத்தில் ஊராட்சிகளை அமைப்பதற்கு குறைந்தது 2500 மக்கள்தொகை இருக்க வேண்டுமென நிர்ணயிக்கலாம் எனக் கருதுகிறது. இந்தப் புதிய வரைமுறை, தற்போதுள்ள ஊராட்சிகளைப் பாதிக்காது. ஆனால், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சிகள் இணைய விரும்பும்போது, அரசு இத்தகைய செயல்குறிப்புகளை ஊக்குவிக்கலாம். ஏனெனில், இது குடியிருப்புகளை ஒருங்கிணைப்பதோடு, சிறந்த நிருவாகத்திற்கும் அப்பகுதி வாழ் மக்களுக்குக் குடிமைப் பணிகளை வழங்கி பராமரிக்கவும் உதவி புரியும். ஒன்றாக இணைப்பதற்கு ஒப்புக்கொள்ளும் அத்தகைய ஊராட்சிகளுக்கு அரசு தகுந்த ஊக்க உதவித்தொகை அனுமதிக்கலாம். 500 வரையிலான மக்கள்தொகைக் கொண்ட தற்போதுள்ள 53 ஊராட்சிகளையும் நாளடையில் அருகிலுள்ள ஊராட்சிகளுடன் இணைப்பது பற்றி பரிசீலிக்கலாம்.

**ஊராட்சிகளின் வகைப்பாடு**

**4.1.08.** ஊராட்சிகளை, பல்வேறு நிலைகளாக வகைப்படுத்துவதற்கு, 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலோ 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலோ விதிமுறை ஏதுமில்லை. நிருவாக வசதியைக் கருத்திற்கொண்டு ஊராட்சிகளை பல்வேறு நிலைகளாக வகைப்படுத்துவது நல்லது எனக் கருதப்படுகிறது. பேரூராட்சிகள், நகராட்சிகள் போன்ற ஏனைய உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தமட்டில், இத்தகைய வகைப்பாட்டுக்கு, சராசரி ஆண்டு வருமானம் அளவுகோலாகக் கொள்ளப்படுகிறது. ஊராட்சிகளை வகைப்படுத்துவதற்கு, அவற்றின் மொத்த மக்கள்தொகை, பின்தங்கிய நிலை, சராசரி ஆண்டு வருமானம் போன்ற பல்வேறு அளவுகோல்கள் பரிசீலிக்கப்பட்டன. பொதுவாக, நிதிப் பற்று வரவுகளை ஒட்டி, பணிச்சுமை அளவிடப்படுகிறது. விரிவான ஆய்வு செய்த பின்னர், சராசரி ஆண்டு வருவாய் அளவுகோல்தான் (சட்டப்படிக்கல்லாத மற்றும் வளர்ச்சிப் பணிகள், மானியங்கள் உட்பட) பொருத்தமானது என்று ஆணையம் கருதி, இ தனையே பரிந்துக்கிறது. மேலும், ஊராட்சிகளை 3 நிலைகளாக வகைப்படுத்தப்படலாம் என்றும் முடிவு பரிந்துரைக்கிறது.

**4.1.09.** அதன்படி, 3 நிலைகளுக்கான வகைப்பாடுகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.2. ஊராட்சிகளை 3 நிலைகளாக வகைப்படுத்துவதற்குரிய வரைமுறைகள்**

சராசரி ஆண்டு வருமான அளவு (சட்டப்படிக்கல்லாத மற்றும் வளர்ச்சிப் பணிகள் மானியங்கள் உட்பட) 31.3.94 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த கடந்த ஐந்தாண்டுகளின் அடிப்படையில்

| நிலை | | ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| III | ரூ.50,000 வரை | 5,297 |
| II | ரூ.50,001 முதல் ரூ.1 இலட்சம் வரை | 3,597 |
| I | ரூ.1 இலட்சத்திற்கு மேற்பட்டு | 3,690 |
| | மொத்தம் | 12,584 |

குறிப்பு:– இந்த ஆண்டு வருமான அளவு, குறித்த காலத்திற்கொருமுறை அரசால் மறு ஆய்வு செய்யப்பட்டு பொருத்தமான முறையில் திருத்தியமைக்கப்படலாம்.

எனவே, மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது.

**4.1.10.** (i) ஒரு ஊராட்சி அமைக்கப்பட குறைந்தது 2500 மக்கள்தொகை இருக்க வேண்டுமென வரையறுக்கப்படலாம். இது வருங்காலத்தில் அமைக்கப்படும் ஊராட்சிகளுக்கு மட்டுமே பொருந்தும். தற்போதுள்ள ஊராட்சிகளைப் பாதிக்காது.

(ii) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சிகள் இணைய விரும்பினால், அத்தகைய ஊராட்சிகளுக்கு அரசு தகுந்த ஊக்க உதவித்தொகைகள் அளிக்கலாம்.

(iii) தற்போது 500-க்கும் குறைவான மக்கள்தொகை கொண்டுள்ள 53 ஊராட்சிகளை காலப்போக்கில் அருகிலுள்ள ஊராட்சிகளுடன் இணைப்பது பற்றி கருதலாம்.

(iv) ஊராட்சிகளை அவற்றின் நிதி ஆதாரத்திற்கேற்ப (சட்டப்படிக்கல்லாத மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கான மானியங்களையும் சேர்த்து) கடைசி 5 ஆண்டுகளின் சராசரி ஆண்டு வருமானத்தின்அடிப்படையில் 3 நிலைகளாகப் பிரிக்கலாம்; ஆண்டு வருமான அளவை குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை அரசு மறு ஆய்வு செய்து திருத்த அளவையும் நிர்ணயிக்கலாம்.

(v) ஊராட்சிகளை 5 ஆண்டுக்கொருமுறை ஒவ்வொரு சாதாரண தேர்தலுக்கு முன்பாகவும் திருத்தியமைக்கலாம். அப்போது தேவைப்படின், வார்டு விரிவு அதிகார வரம்பு (எல்லை) ஆகியவற்றில் சிறு மாறுதல்களும் செய்து கொள்ளலாம்.

## ஆ. ஊராட்சி ஒன்றியங்கள்

### அமைத்தல்/திருத்தியமைத்தல்

4.1.11. சமுதாய வளர்ச்சி குறித்த தேசிய விரிவாக்கப் பணித் திட்டத்தின் நோக்கத்திற்காக, ஒரு வளர்ச்சி வட்டாரமாக அமைந்துள்ள எந்தவொரு உள்ளூர்ப் பகுதியையும் ஓர் அறிவிக்கை வெளியிடுவதன் வாயிலாக ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக அறிவிப்பதற்கும், அத்தகைய ஒவ்வொரு ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திற்கும் ஒரு ஊராட்சி ஒன்றியத்தை அமைப்பதற்கும், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 15 (1) பிரிவு அரசுக்கு அதிகாரம் அறிக்கிறது. தற்போது, இம் மாநிலத்தில் 12,584 ஊராட்சிகளை உள்ளடக்கிய 384 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் அதிகார வரம்பின்கீழும் சராசரியாக 33 ஊராட்சிகள் உள்ளன.

4.1.12. முந்தைய தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்துடன் ஒப்பிடுகையில், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் ஒரு பெரும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 74 ஆம் திருத்தத்திற்கேற்ப, பேரூராட்சிகள், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் ஆய்வு வரம்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பேரூராட்சிப் பகுதிகள், ஊராட்சி ஒன்றியங்களின் அதிகார வரம்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அதேபோன்று, ரத்து செய்யப்பட்ட 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்படி 95,780 ஆக இருந்த ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி மக்கள் தொகை, புதிய தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்படி, 84,635 ஆகக் குறைந்தது. ஊராட்சிகளின் எண்ணிக்கை அவற்றின் பரப்பின் அடிப்படையில் பார்க்கும்போது ஊராட்சி ஒன்றியங்களுக்கிடையே பெருத்த வேறுபாடு காணப்படுகிறது. எளிதில் அணுகுவதில் பிரச்சினைகள் காரணமாக, மலைப்பகுதிகளில் ஊராட்சிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களின் அளவு சிறியதாக இருப்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், சமவெளிகளிலுங்கூட, ஊராட்சிகளின் எண்ணிக்கை, மக்கள்தொகை ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களிடையே பெரும் வேறுபாடு காணப்படுவது புதிராக உள்ளது. மக்கள்தொகையிலும் கூட, பெருத்த வேறுபாடுகள் உள்ளன. 384 ஊராட்சி ஒன்றியங்களில், சராசரி மக்கள்தொகை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 4.3 மக்கள்தொகை வரம்பு வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை

| மக்கள்தொகை | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள்தொகை கொண்டவை | 104 |
| 75,000 க்கும் ஒரு இலட்சத்திற்குமிடைப்பட்டமக்கள்தொகை கொண்டவை | 133 |
| 50,000 க்கும் 75,000 க்குமிடைப்பட்ட மக்கள்தொகை கொண்டவை | 104 |
| 50,000 க்குக் குறைவான மக்கள்தொகை கொண்டவை | 43 |
| மொத்தம் | 384 |

4.1.13. புதிய ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கும் நிலை தற்போது ஏதுமில்லையென்றாலும், கீழ்க்கண்ட காரணங்களுக்காக பின்னொரு நாளில் ஊராட்சி ஒன்றியங்களை ஒன்று சேர்த்து, இரண்டாக அல்லது மூன்றாகப் பிரிக்கும் நிலை ஏற்படலாம்.

(i) 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்ட போதே சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் நடைமுறையில் இருந்ததால் வளர்ச்சி வட்டாரங்களிடையே அவற்றின் பரப்பு, மக்கள்தொகை , அவற்றில் அடங்கியுள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபாடு இருந்தபோதிலும், எல்லைகளில் எவ்வித மாற்றமும் செய்யாமல், அத்தகைய சமுதாய வளர்ச்சி வட்டாரங்களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்படுத்தப்பட்டன. எனவே, ஊராட்சி ஒன்றியங்களின் அளவு பற்றி மீண்டும் புதிதாகப் பரிசீலித்து அவற்றின் எல்லைகளை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகிறது.

(ii) கச்சிதமான அளவு, திறமையான நிருவாகம், நிருவாகக் கட்டுப்பாடு, மேற்பார்வை, வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாட்டைக் கண்காணித்தல், சார்பு முகவரமைப்புகள் மற்றும் வளர்ச்சித் துறைகளுடன் ஒருங்கிணைப்பு ஆகிய நோக்கங்களை எய்துவதற்காக, மாநிலத்தில் தற்போதுள்ள மாவட்டங்கள் இரண்டாகவும் மூன்றாகவும் பிரிக்கப்பட்டுகின்றன. இதன் விளைவாக, வருவாய்க் கோட்டங்களும், வட்டங்களும்கூட இரண்டாகப் பிரிக்கப்பட்டன. இதே பரவலாக்கும் நடைமுறையைப் பின்பற்றி, கச்சிதமான அளவு, சிறந்த ஒருங்கிணைப்பு, நெடுந்தொலைவிலுள்ள கிராமங்களுக்கு எளிதில் சென்றுவர வசதி ஆகிய நோக்கங்களுக்காக, எளிதில் நிர்வகிக்க முடியாத அளவுக்கு பெரியதாக உள்ள ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்தல் வேண்டும்.

(iii) ஏற்கனவே குறிப்பிட்டவாறு பேரூராட்சிகள், தமிழ்நாடு நகராட்சிகள் சட்டத்தின் ஆய்வு வரம்பின் கீழ் கொண்டுவரப்பட்டதால், இனிமேல் அவை ஊராட்சி ஒன்றியங்களின் ஒரு பகுதியாக இருக்கமாட்டா. எனவே, பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் 8.78 மில்லியன் மக்கள் இனி, ஊராட்சி ஒன்றியங்களின் அதிகார வரம்பின் கீழ் வரமாட்டார்கள். இதன் காரணமாக, தற்போதுள்ள பல ஊராட்சி ஒன்றியங்களின் மக்கள் தொகை கணிசமான அளவுக்குக் குறையும். இதனால் ஊராட்சி ஒன்றியங்களின் அதிகார வரம்பை மீண்டும் மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

**4.1.14.** எனவே, ஊராட்சி ஒன்றியங்களின் பரப்பு, மக்கள்தொகை, ஊராட்சிகளின் எண்ணிக்கை, நிருவாக வகையில் எளிதில் அணுகும் தன்மை போன்ற கூறுகளின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களின் அதிகார வரம்பை மாற்றியமைக்க வேண்டிய காலக்கட்டம் வந்து விட்டது என்று கருதப்படுகிறது. ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மிக அதிக அளவிலான ஊராட்சிகளின் எண்ணிக்கை 73 ஆகும். (அண்ணா மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம்) மிகக் குறைவான ஊராட்சிகளின் எண்ணிக்கை 3 (நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் ஊராட்சி ஒன்றியம்) ஒரு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சராசரி ஊராட்சிகளின் எண்ணிக்கை 33. சராசரி மக்கள் தொகை சுமார் 84, 635 ஆகும்.

**4.1.15.** ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாக அல்லது மூன்றாகப் பிரிக்கும் போது அல்லது மாற்றியமைக்கும்போது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை (சமீபத்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி) 60, 000 முதல் 75, 000 வரையில் இருக்குமளவிலும் சம்பந்தப்பட்ட எல்லைப் பகுதிகள், அடுத்தடுத்தமைந்திருக்குமாறும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நிதி ஆணையம் பரிந்துரைக்கிறது. நிருவாக வசதிக்காகவும், செவ்விய முறையில் மேற்பார்வையிடவும், வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை செவ்விய முறையில் கண்காணிப்பதற்காகவும், பரப்பளவின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்தின் அளவு குறைந்த கால அளவில் அனைத்து கிராமங்களையும் எளிதில் பார்வையிடுவதற்கு வசதியாக இருக்க வேண்டும் என்றும் நிதி ஆணையம் பரிந்துரைக்கிறது. அவசியமான இடங்களில் ஊராட்சி ஒன்றியங்களின் அதிகார வரம்பில் தேவையான மாற்றங்களைச் செய்து, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஊராட்சி ஒன்றியங்களை மாற்றியமைக்கலாம்.

**4.1.16.** சமுதாய வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றும் பணி, தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழும், தற்போதைய, தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் 113 ஆம் பிரிவின் கீழும், ஊராட்சி ஒன்றியங்களிடம் சட்டப்படி ஒப்படைக்கப்பட்டது. அனைத்து ஊராட்சி ஒன்றியங்களையும் மேம்படுத்துவதற்காக முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது, நிதித் திரட்டும் திறன், ஊராட்சி ஒன்றியத்திற்கு ஊராட்சி ஒன்றியம் வேறுபடுகிறது என்பது உணரப்பட்டது. காலப்போக்கில், சில ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் வளர்ச்சியடைந்திருந்தபோதிலும், சில ஊராட்சி ஒன்றியங்கள் வளர்ச்சியில் பின்தங்கியிருந்தன. பிறவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவை வளர்சி அடைய, அவற்றுக்கு அதிக அளவில் நிதியுதவி தேவைப்படுகிறது. தொலை நோக்கிலான இக்கண்ணோட்டத்தைக் கருத்தில் கொண்டு, அரசு மானியங்கள் வழங்குவதற்காக வரி வருமான அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களை அரசு வகைப்படுத்தியுள்ளது. ஊராட்சி ஒன்றிய தனி நபர் நிலவரி வருவாய் அத்தகைய வகைப்பாட்டிற்கு, அடிப்படையாக அமைந்தது.

**4.1.17.** தொடக்கத்தில் இம்மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களும், தனி நபர் நிலவரி வருவாய் அளவின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டன. இதன்படி மிக அதிக தனி நபர் வருவாய் கொண்ட முதல் 40 சதவீத ஊராட்சி ஒன்றியங்கள் 'அ' வகை ஊராட்சி ஒன்றியங்களாகவும் வகைப்படுத்தப்பட்டன. அடுத்தபடியாக தனி நபர் வருவாய் கொண்ட 30 சதவீத ஊராட்சி ஒன்றியங்கள் 'ஆ' வகை என வகைப்படுத்தப்பட்டன. அதேபோன்று அடுத்த 20 சதவீத மற்றும் 10 சதவீத ஊராட்சி ஒன்றியங்கள் முறையே 'இ' மற்றும் 'ஈ' வகை ஊராட்சி ஒன்றியங்களாக வகைப்படுத்தப்பட்டன. இந்த வரி வருமான அடிப்படையிலான வகைப்பாடு, உள்ளூர் செஸ் மேல் வரி இணை மானியம், தொடக்கக் கல்வி மானியம், கிராமப் பணிகள் மானியங்கள் முதலிய அரசு மானியங்களை அனுமதிப்பதற்குப் பின் பற்றப்பட்டன. உயர் நிலை ஊராட்சி ஒன்றியங்கள் அதாவது, 'அ', 'ஆ' வகை ஊராட்சி ஒன்றியங்கள் உயர் வகை ஊராட்சி ஒன்றியங்களாகக் கருதப்பட்டு

அவற்றிற்குக் குறைவான மானியங்கள் அனுமதிக்கப்பட்டன. கீழ் மட்ட ஒன்றியங்கள், அதாவது 'இ', மற்றும் 'ஈ' வகை ஒன்றியங்களுக்கு அரசு மானியம் அதிக அளவில் அனுமதிக்கப்பட்டது.

**4.1.18.** இது பற்றி பின்பு ஆராய்ந்த, 1969 ஆம் ஆண்டு ஊராட்சிக் கல்வி நிதி விசாரணைக் குழு, தற்போதைய வரி வருமான அடிப்படையிலான 'அ', 'ஆ', 'இ', 'ஈ' என்ற வகைப்பாடுகள், ஊராட்சி ஒன்றியங்களின் நலனுக்கு உகந்தவை அல்ல என்று கருதியது. அக்குழு ஊராட்சி ஒன்றியங்களை 4 வகைகளாக வகைப்படுத்தப்படுவதற்குப் பதிலாக, கீழே குறிப்பிட்டுள்ளவாறு ஊராட்சி ஒன்றியத்தின் தனிநபர் நில வரிக்கேற்ப, 6 வகைகளாக வகைப்படுத்தப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு வகையின் கீழும் எத்தனை ஊராட்சி ஒன்றியங்கள் இருக்க வேண்டும் என்ற வரையறை எதுவும் தேவையில்லை என்றும் கருதியது. அவ்வாறே, இம்மாநிலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் 6 வகைகளாக (கீழே காட்டப்பட்டவாறு) வகைப்படுத்தப்பட வேண்டுமென குழு பரிந்துரைத்தது. இது அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்பட்டது.

**அட்டவணை 4.4. ஊராட்சி ஒன்றியங்களை வகைப்படுத்துவதற்கான தற்போதைய வரைமுறைகள்:**

| தனிநபர் நில வருவாய் | ஊராட்சி ஒன்றியத்தின் வகை |
|---|---|
| ரூ.4 க்கும் மேல் | I |
| ரூ.3க்கும் ரூ.4க்கும் இடையில் | II |
| ரூ.2க்கும் ரூ.3க்கும் இடையில் | III |
| ரூ.1க்கும் ரூ.2க்கும் இடையில் | IV |
| ரூ.0.75க்கும் ரூ.1க்கும் இடையில் | V |
| ரூ.0.75க்கும் குறைவாக | VI |

**4.1.19.** 1977 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட அலுவலல் சார்புக் குழு, ஊராட்சி ஒன்றியங்களின் வகைப்பாடு குறித்து விரிவாக ஆராய்ந்தது. முதல்வகைப்பாடு, 1961 ஆம் ஆண்டு மக்கள்தொகையின் அடிப்படையில் செய்யப்பட்டது. மறு வகைப்பாடு, 1971 ஆம் ஆண்டு மக்கள்தொகையின் அடிப்படையில் அலுவல் சார்புக் குழுவால், பரிந்துரைக்கப்பட்டது. இக்குழு, மறு வகைப்பாடு குறித்து தனது பரிந்துரையை அளிப்பதற்கு முன்னர் பின்வரும், மாற்று செயல் குறிப்புகளையும் ஆராய்ந்தது.

(i) அப்பகுதியின் நில வரி வருவாய்;

(ii) அப்பகுதியின் வளர்ச்சி நிலைமை;

(iii) ஊராட்சி ஒன்றியத்தின் கீழ்வரும் கிராமங்களின் எண்ணிக்கை மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் பரப்பளவு;

(iv) அப்பகுதியின் பின்தங்கிய நிலை.

**4.1.20.** இக்கருத்துக்கள் அனைத்தையும் பரிசீலித்த பின்னர் குழு, ஒரு பகுதியின் நிலவரி வருவாய், அப்பகுதியின் வளமை மற்றும் மக்களின் தேவை ஆகியவற்றை சுட்டிக்காட்டுவதாகவும் எனவே, ஊராட்சி ஒன்றியங்களை தனி நபர் நில வரி வருவாய்க்கிணங்க, வகைப்பாடு செய்வது மிகவும்

பொருத்தமானது என்றும் கருத்துத் தெரிவித்தது. அதன்படி 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில் 3 ஆண்டுகளுக்கான சராசரி நில வரி வருவாயைக் கருத்தில் கொண்டு திருத்த வகைப்பாடுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

**4.1.21.** 1990 ஆம் ஆண்டில் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலைமைகள் பற்றி ஆராய்ந்த, திரு.ஏ.ஆர்.தாமோதரன் தலைமையிலான வல்லுநர்க்குழு, ஊராட்சி ஒன்றியங்களின் வகைப்பாடு குறித்து ஆய்வு செய்தபோது, ஊராட்சி ஒன்றியங்களின் முக்கிய நிதி ஆதாரங்கள் இன்னமும் நில வரி அளவைப் பொறுத்தே அமைவதாலும், ஒரு பகுதியின் பின் தங்கிய நிலை மற்றும் வளர்ச்சியின் நிலை முதலியவற்றை அளவிடதிட்டவட்டமானதொரு அளவுகோல் எதுவும் வரையறுக்கப்படாததாலும், இது காறும் பின்பற்றப்பட்டு வந்த நில வரி தனிநபர் வருமான அளவே தொடர்ந்து அடிப்படை அளவுகோலாகப் பின்பற்றப்படலாம் என்னும் முடிவுக்கு வந்தது.

**4.1.22.** இப்பிரச்சினை குறித்து, மேலும் ஆழமாக ஆராய்ந்த நிதி ஆணையம் தனி நபர் நில வரி வருவாயின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களை வகைப்படுத்துவது பன்னெடுங்காலமாக வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவதாலும், அத்தகைய வகைப்பாட்டிற்கு ஈடான வேறு மாற்று ஏற்பாடு எதுவும் இல்லாததாலும், தனி நபர் நிலவரி வருவாய் அடிப்படையிலான வகைப்பாடே தொடர்ந்து இருக்கலாம் என்றும் முடிவுக்கு வந்தது. தற்போதுள்ள ஆறு வகையான ஊராட்சி ஒன்றியங்கள் தொடர்ந்து இருக்கலாம். பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் அதிகார வரம்பிலிருந்து எடுக்கப்பட்டு விட்டதால், ஊராட்சி ஒன்றியங்களின் தற்போதைய தனி நபர் நில வரி வருவாய் மாறலாம். இதன் காரணமாக, ஊராட்சி ஒன்றியங்களை வகைப்படுத்துவதற்கான தனி நபர் நில வரி வருவாய் வரைமுறைகள் குறித்து மேற்கொண்டும் பரிசீலிக்க வேண்டியிருக்கும். நிலவரி ஆணையாளரிடமிருந்து இது வரையில் ஆணையத்திற்கு வரப்பெற்ற 13 மாவட்டங்கள் பற்றய நிலவரி புள்ளி விவரங்களைக் காணுமளவில், அம்மாவட்டங்களில் ஒரு கதம்பமான நிலை நிலவுவதையே காட்டுகின்றன. எனவே ஊராட்சி ஒன்றியங்களைப் புதிதாக வகைப்படுத்தும் நோக்கத்துடன் திருந்திய வரைமுறைகளை நிர்ணயிப்பதற்காக, எஞ்சிய மாவட்டங்கள் தொடர்பாகவும் புள்ளி விவரங்களைப் பெற்ற பின்னர், மாவட்ட ஆட்சியாளர்களுடனும், நிலவரி ஆணையகத்துடனும் கலந்தாலோசித்து, ஊரக வளர்ச்சித்துறை இது குறித்து மேலும் பரிசீலிக்க வேண்டும் என்று ஆணையம் கருதுகிறது. 13 மாவட்டங்களில் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்ட நிலவரி விபரம் மற்றும் உள்ளூர் செஸ் வரி இணை மானியத்திற்கான விபரம் இணைப்பு 15ல் தரப்பட்டுள்ளது.

**4.1.23.** மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது.

(i) பத்தி 4.1.22–ல் கண்டுள்ளவாறு ஊராட்சி ஒன்றியங்களை வகைப்படுத்த/ மறுவகைப்படுத்த தனி நபர் நில வரி வருவாய் குறித்த வரைமுறைகள் திருத்தியமைக்கப்படலாம். இந்தக் கொள்கை அடிப்படையில் தொடர்ந்து தனிநபர் நில வரி வருவாய் குறித்த வரை முறைகள் ஊராட்சி ஒன்றியங்களை வகைப்படுத்த/மறுவகைப்படுத்த பயன்படுத்தலாம்.

(ii) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தையும் ஆறு வகைகளாக வகைப்படுத்துவது குறித்த விவரங்கள், 4.1.22 பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள வரைமுறைகளின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியாளர்கள், ஊரகவளர்ச்சி இயக்குநரை கலந்தாலோசித்து முடிவு செய்யலாம்.

## இ. பேரூராட்சிகள்

### அமைத்தல்/திருத்தியமைத்தல்:

**4.1.24.** உள்ளாட்சி நிருவாகத்தின் ஓர் அமைப்பாகத் திகழும் பேரூராட்சி, தமிழ் நாட்டில் காணப்படும் தனித் தன்மை வாய்ந்த ஓர் அமைப்பு முறையாகும். தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தில் பேரூராட்சிகளின் வகைப்பாட்டிற்கு "நகரத்தன்மை" –யும் ஒரு அளவுகோலாகக் கொள்ளப்பட்டது. ஆனால், நடைமுறையில், ஊராட்சிகள் பேரூராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்டபோது, மக்கள் தொகையும் குறைந்தளவு வருமானமும் மட்டுமே அடிப்படையாகக் கொள்ளப்பட்டன. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (ரத்து செய்யப்பட்டது) 3 ஆம் பிரிவின்படி, ஒரு வருவாய் கிராமத்தை அல்லது கிராமங்களை அல்லது வருவாய் கிராமத்தின் யாதொரு பகுதியை அல்லது இரண்டு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த தொடர்ச்சியாக அமைந்துள்ள பகுதியைக் கொண்டதும், 5000க்கும் குறையாத மக்கள் தொகையையும் ரூ.10,000/–க்குக் குறையாத ஆண்டு வருமானத்தையும் (இது பின்னர் ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டது) கொண்டதுமான ஒவ்வொரு உள்ளூர் பகுதியையும் ஓர் பேரூராட்சியாக ஆய்வாளரால், அதாவது, பேரூராட்சிகள் இயக்குநரால் அறிவிக்கப்படலாம். ஊராட்சிகள், பேரூராட்சிகளாக நிலை உயர்த்தும்போது, அப்பகுதி, நகரத்தன்மையுடையதா என்ற முக்கியமான அளவுகோல், கருத்திற் கொள்ளப்படுவதே இல்லை. தற்போது 635 பேரூராட்சிகள் உள்ளன. இவற்றை பகுப்பாய்வு செய்த போது பெரும்பாலான பேரூராட்சிகள் தற்போதுள்ள வரைமுறைகளின்படி 5000 மக்கட் தொகையும் குறைந்த அளவு ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு வட்சம் என்பவற்றை பூர்த்தி செய்ததால் நிருவாக வசதிக்காக அவை பேரூராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்டிருந்தாலும் இன்னும் கிராமத்தன்மை உடையவையாகவே இருக்கின்றன. அவை பேரூராட்சிகளாக நிலை உயர்த்தப்படுவதற்கு முன்னர் அவற்றின் நகரத்தன்மை அல்லது நிதிவகையில் தனித்தியங்கும் தன்மை கருத்திற் கொள்ளப்படவில்லை.

**4.1.25.** அரசியலமைப்பு 74வது திருத்தச் சட்டத்தின்படி, பேரூராட்சிகள், "நகர்பாலிகா" ஆய்வு வரம்பின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளன; அதற்கிணங்க, பேரூராட்சிகளின் நிருவாகம், தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டத்தின் அதிகார வரம்பின்கீழ்க் கொண்டுவரப்பட்டது.

**4.1.26.** ஒரு நகரப் பஞ்சாயத்து அல்லது பேரூராட்சி என்பது, நிலை திரிபான ஒரு பகுதி (Transitional Area) அதாவது கிராமப் பகுதியாக இருந்து நகர்ப்பகுதியாக மாறிவரும் ஒரு பகுதி என்று 1992ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் (74வது திருத்தம்)படி பொருள் விளக்கம் அளிக்கிறது. பேரூராட்சி, உண்மையில் அல்லது முற்றிலும் நகரத்தன்மையுடையதல்ல ஆனால், படிப்படியாக அவ்வாறு மாறி வரும் பகுதியாகும் என்பதும்; எனவே, அவை ஊராட்சி அமைப்புகளின்கீழ் வகைப்படுத்தப்பட்டு, அமைய வேண்டும் என்பதும் தெளிவாகின்றது. நகர்ப்பகுதிகளாக அங்கீகரிக்கப்படுவதற்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வரைமுறைகளை நகராட்சிகள் நிறைவு செய்கின்றனவா இல்லையா என்பதை கருத்தில் கொள்ளாமலேயே மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, அனைத்து நகராட்சிப் பகுதிகளையும் நகர்ப்பகுதிகளாக வகைப்படுத்துகின்றது. ஆனால் மக்கள் தொகைக்கணக்கெடுப்பு வரைமுறைகளை நிறைவு செய்கிற பேரூராட்சிகள் மட்டுமே நகர்ப்பகுதிகளாக வகைப்படுத்தப் படுகின்றது என்பதும் இந்த வாதத்திற்கு வகை சேர்க்கும் மற்றொரு அம்சமாகும். இம்மாநிலத்தில், தற்போது மொத்தம் 87.80 இலட்சம் மக்கள் தொகைக் கொண்ட 635 பேரூராட்சிகளில், 420 பேரூராட்சிகள் அல்லது 66 சதவீத பேரூராட்சிகள் கிராமத்தன்மை வாய்ந்தவை என்பதை அறியும்போது பேரூராட்சிகள் நகராட்சிகளோடு சேர்த்து வகைப்படுத்தப்படுவது முரண்பாடாக உள்ளது.

**4.1.27.** பேரூராட்சிகள், நகர்பாலிகாசட்டத்தின் ஆய்வு வரம்பின் கீழ்க் கொண்டு வரப்பட்டதால் ஊரக வறுமை ஒழிப்பு மற்றும் ஏனைய திட்டஙகளின்கீழ் மத்திய அரசின் நிதியுதவியைப் பெறத் தகுதியற்றவை ஆகிவிடும்.

**4.1.28.** நிலைதிரிபான பகுதி (transitional)அல்லது பேரூராட்சி என்பது, ஆளுநர் அவர்கள், தாம் தகுதியெனக் கருதக் கூடியவாறு, ஒரு பகுதியின் மக்கள் தொகை, அப்பகுதியின் மக்கள் தொகை நெருக்கம், உள்ளாட்சி நிருவாகம் ஈட்டும் வருவாய், வேளாண்மை சாராப் பணிகளில் ஈடுபட்டுள்ளோரின் சதவீதம், பொருளாதார முக்கியத்துவம், அல்லது ஏனைய கூறுகள் ஆகியவற்றை அடிப்டையாகக் கொண்டு பொது அறிவிக்கை வெளியிடுவதன் மூலம் அறிவிக்கின்ற ஒருபகுதி என்று 1992ஆம் ஆண்டு அரசியலமைப்பு (74வது திருத்த) சட்டம் குறிப்பிடுகின்றது. இந்திய மக்கள் தொகைக்கணக்கெடுப்பு தலைமைப் பதிவாளர் ஓர் இடத்தை நகர்ப்பகுதியாக கொள்வதற்குப் பின்பற்றிய அளவு கோலின் அடிப்டையில் பெரிதும் இப்பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி, பின்வரும்அளவுகோலின் அடிப்படையில் ஒரு பகுதி நகர்ப்பகுதியாக பொருள் விளக்கம் அளிக்கப்படுகிறது.

(அ) சட்டப்படிக்கான ஒரு நகரம் அதாவது ஒரு நகராட்சி, மாநகராட்சி, பாளையப்பகுதி (Contonment) அல்லது அறிவிக்கையிடப்பட்ட நகர்ப்பகுதிக்குழு (Notified Town Area Committee) ஆகியவற்றின் கீழ் வருகின்ற அனைத்து இடங்கள்;

(ஆ) பின்வரும் அளவுகோல்களை நிறைவு செய்யும் ஏனைய இடங்கள் அனைத்தும்:

(i) குறைந்தது 5000 மக்கள் தொகை கொண்டது;
(ii) பணியுரியும் ஆண்களில் குறைந்தது 75 சதவீதத்தினர் வேளாண்மை சாராப் பணிகளில் ஈடுபட்டிருத்தல்;
(iii) மக்கள் தொகை நெருக்கம் சதுரக் கிலோ மீட்டர் ஒன்றுக்கு குறைந்தது 400 பேராக இருத்தல்.

**4.1.29.** தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டம் அத்தியாயம் IA-3 B பிரிவின் கீழ், மேற்படி விதி முறைகளைச் சேர்க்கும் போது ஒரு வருவாய் கிராமத்தை அல்லது கிராமங்களை அல்லது ஒரு வருவாய் கிராமத்தின் யாதொரு பகுதியை அல்லது இரண்டு அல்லது அதிகமான வருவாய் கிராமங்களின் அடுத்தடுத்த பகுதிகளைக் கொண்ட மக்கள் தொகையும், ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத ஆண்டு வருமானம் உள்ள உள்ளூர் பகுதிக்கு ஒரு பேரூராட்சி அமைக்கலாம் என்றும் வகை செய்தது. இவ்வாறாக பேரூராட்சி அமைப்பதற்கு, மக்கள் தொகை மற்றும் வருமான வரம்புடன் முதன் முறையாக பொருளாதார வரம்பும் சேர்க்கப்பட்டுள்ளது.

**4.1.30.** தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டத்தின் விதி முறைகளின்படி, பொருளாதார அளவுகோலை நிறைவு செய்யாத 420 பேரூராட்சிகளையும் ஊராட்சிகள் நிலைக்குத் தள்ளப்பட வேண்டிய நிலை உள்ளது. குடிநீர் வழங்கல் திட்டங்கள் போன்ற நோக்கங்களுக்காக நகர்ப்பகுதியாக கருதப்படுகின்றதும் நகர்ப்பகுதி என்று அழைக்கப்படுவதற்குரிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அளவு கோலினை நிறைவு செய்யும் வகையிலானதுமான 235 பேரூராட்சிகளில் 98 பேரூராட்சிகள் மட்டுமே நகர்ப்பகுதியின் தன்மையில் அமைகின்றன. எஞ்சிய 117 பேரூராட்சிகளில், பெரும்பாலானவை, சுற்றியுள்ள கிராம மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் சிறு வர்த்தக அல்லது விற்பனை மையங்ளாகவே விளங்குகின்றன.

**4.1.31.** பல பேரூராட்சிகளுக்கு போதிய நிதி ஆதாரங்கள் இல்லை என்பதும், அவற்றில் பெரும்பாலானவற்றின் நிலை ஊராட்சிகளின் நிலையைவிட நன்றாக இல்லை என்பதும் தெரியவருகிறது. இம்மாநிலத்தில் பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் 31.3.94 அன்றுடன் முடிவடைந்த கடைசி 3 ஆண்டுகளின் ஆண்டு சராசரி வருவாயின வரவு ரூ.74.02 கோடி, ஆண்டு வருவாயினச் செலவு ரூ.64.97 கோடி; தனி நபர் வருவாயின வரவு ரூ.84; தனி நபர் வருவாயினச் செலவு ரூ.74 . இதில் போதிய நிதி வசதி இல்லாததால் நிலுவையாக உள்ள கடன் பொறுப்புக்களும் செலவுப் பொறுப்புக்களும் கருத்திற் கொள்ளப்படவில்லை. 1993–94 ஆம் ஆண்டு கணக்குப்படி உள்ளூர் வரி மூலம் கிடைத்த வருவாய் ரூ.25.13கோடி; தனி நபர் வருமானம் ரூ.29 ஆகும். ஒப்படை வருவாய் (Assignments)மற்றும் மானியங்கள் மூலம் கிடைக்கம் வருவாய் ரூ.27.89 கோடி; தனி நபர் வருமானம் ரூ. 32 ஆகும். பணியாளர்கள் சம்பளம் உட்பட பொது நிருவாகம் குறித்த செலவு ரூ.12.18 கோடி; தனி நபர் செலவு ரூ.14. அதிகமான பேரூராட்சிகள், தங்கள் சட்டபூர்வமான செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கு ஒப்படை வருவாய்களையும் (Assigned Revenues) மானியங்களையுமே நம்பி இருப்பதும், அவற்றின் வரிகள் மூலம் பெறப்படும் தொகை, மொத்த நிருவாகச் செலவுக்குக் கூட போதுமானதாக இல்லை என்பதும் தெரிகிறது. கணிசமான எண்ணிக்கையிலான பேரூராட்சிகள், தங்கள் பணியாளர்களின் சம்பளங்களையும், தெருவிளக்குச் செலவுகளையும் சரிக்கட்ட இயலாத நிலையில் உள்ளதும் காணப்படுகிறது . வரிகள் மூலம் சுயநிதி ஆதாரங்களை முறையாக உருவாக்கக்கூடிய நியாயமான வலுவான பொருளாதார ஆதாரத்தைக் கருதிப் பார்க்காமல், ஊராட்சிகளை பேரூராட்சிகளாக நிலை உயர்த்தியதே தற்போதைய நிலைக்கு பெரிதும் காரணமாகும்.

**4.1.32.** பேரூராட்சிகளின் நிலை வாரியான சராசரி ஆண்டு நிருவாசச் செலவு (பணிக்கு அமர்த்தப்பட்ட பணியாளர்கள் உட்பட) குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (1993–94ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களின்படி)

| | | |
|---|---|---|
| (i) | நிலை-II | ரூ.2.25 இலட்சம் |
| (ii) | நிலை–I | ரூ.3.40 இலட்சம் |
| (iii) | தேர்வு நிலை | ரூ.8.23 இலட்சம் |

**4.1.33.** ஆணையம், மேற்கொன்ன அனைத்துக் கூறுகளையும் பரிசீலித்து, ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாக, நிலை உயர்த்துவதற்கான வரைமுறைகள் பின் வருமாறு நிர்ணயிக்கப்படலாம் என்று பரிந்துரைக்கிறது.

(i) மக்கள் தொகை 15, 000க்கு குறையாமல் இருக்க வேண்டும்.

(ii) ஆண்டு சராசரி வருமானம் (கடன்கள் காலாவதியான முன்பணங்கள், வீட்டு வரி ஈட்டுமானியம், சட்டப்படிக்கல்லாத மற்றும் வளர்ச்சிப்பணி மானியங்கள் முதலியன நீங்கலாக) ரூ.10 இலட்சத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

(iii) வேளாண்மை சாராப் பணிகளில் நியாயமான அளவுக்கு (விழுக்காடு) வேலைவாய்ப்பு இருக்க வேண்டும்.

**4.1.34.** பத்தி 4.1.26ல் குறிப்டப்பட்டுள்ளவாறு, 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 10,000க்கும் குறைந்த மக்கள் தொகை கொண்ட ஊரகத் தன்மை வாய்ந்த 420 பேரூராட்சிகளுள் 92 பேரூராட்சிகளின் ஆண்டு வருமானம் ரூ.5.00 இலட்சத்திற்கும் குறைவாக

உள்ளது. நகரத்தன்மை வாய்ந்த 235 பேரூராட்சிகளுள், 6 பேரூராட்சிகளின் ஆண்டு வருவாய் ரூ. 5 இலட்சத்திற்கும் குறைவாக உள்ளது. எனவே, ஆணையம் இந்த 98 பேரூராட்சிகளின் (92+6) நிதிநிலையை உயர்த்த சிறப்பு கவனம் செலுத்தலாம் எனவும் அல்லது பேரூராட்சிகளின் இயக்குநரை முறையாகக் கலந்தாலோசித்த பிறகு அவற்றை ஊராட்சிகளாக மறு வகைப்பாடு செய்யலாம் எனவும் கருதுகிறது. இல்லையேல், இத்தகைய பேரூராட்சிகளுக்கு அடிப்படை வசதிகளின் மேம்பாடு மற்றும் பராமரிப்புக்காக, சிறப்பு நிதியுதவிகள் அளிக்கப்பட வேண்டும்.

**வகைப்பாடு/மறுவகைப்பாடு:**

**4.1.35.** தற்போதுள்ள பேரூராட்சிகள் 4 நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகைப்பாடு, அவற்றிற்கு அனுமதிக்கப்படும் பணியார்களின் எண்ணிக்கை, ஏனைய அடிப்படை வசதிகள் ஆகியவை பற்றி முடிவு செய்வதில் அரசுக்கு உதவியாக இருக்கும். தற்போதைய அளவுகோல்கள், கீழே ஒவ்வொரு நிலைக்கும் (3 நிலைக்கு) எதிரில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.5. பேரூராட்சிகளை வகைப்படுத்துவதற்கான தற்போதைய வரைமுறைகள்:**

| நிலை | தற்போதைய அளவுகோல். கடைசி 3 ஆண்டுகளில் சராசரி ஆண்டு வருமானம்(ரூ) |
|---|---|
| II | 4 இலட்சம் |
| I | 8 இலட்சம் |
| தேர்வு நிலை | 10 இலட்சம் |

**4.1.36.** ஆணையம் செலவு உயர்வு, நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் அளவு, நியமிக்கப்பட வேண்டிய குறைந்தளவுப் பணியாளர்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, வருங்காலத்தில் பேரூராட்சிகளை வகைப்படுத்த பின்வரும் மக்கள் தொகை அளவு மற்றம் ஆண்டு வருமான அளவு கோல் பின்பற்றப்படலாம் என்று பரிந்துரைக்கிறது.

**அட்டவணை 4.6. பேரூராட்சிகளை வகைப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படும் வரைமுறைகள்:**

| நிலை | உத்தேச அளவு கோல் | |
|---|---|---|
| | மக்கள் தொகை | கடைசி 3 ஆண்டுகளில் சராசரி ஆண்டு வருமானம். |
| II | 10,000 வரை | ரூ. 10 இலட்சத்திற்கும் மேல் |
| I | 15,000 வரை | ரூ. 15 இலட்சத்திற்கும் மேல் |
| தேர்வுநிலை | 20,000 வரை | ரூ. 20 இலட்சத்திற்கும் மேல் |
| சிறப்புநிலை | 20,000 மேல் | ரூ. 50 இலட்சத்திற்கும் மேல் |

குறிப்பு: ஆண்டு சராசரி வருமானத்தைக் கணக்கிடும்போது கடன்கள், காலாவதியான வைப்பீடுகள், சட்டப்படிக்கல்லாத மற்றும், வளர்ச்சிப்பணிகளுக்கான மானியங்கள் நீக்கப்படல் வேண்டும்.

**ஈ. நகராட்சிகள்:**

**அமைத்தல்/திருத்தியமைத்தல்**

**4.1.37.** தமிழ்நாடு 1920ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அமைத்தல்/திருத்தியமைத்தல் பற்றி வரைமுறைகள் எதையும் குறிப்பிடவில்லை.இருப்பினும்,பேரூராட்சிகளின் மக்கள் தொகை 20,000க்கு குறையாமலிருந்து, அதன் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மேற்பட்டிருந்தால், (பின்னர் ரூபாய் 3 இலட்சமாகத் திருத்தியமைக்கப்பட்டது) அப்பேரூராட்சிகள் அரசால் நகராட்சியாக நிலை உயர்த்தப்படுகிறது.

**4.1.38.** 1992 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் (74வது திருத்தம்) சட்டம் இனிமேல் மூன்று வகையான நகராட்சிகள் இருக்குமென வகை செய்கிறது; அவை:

நகர் பஞ்சாயத்து

நகராட்சி மன்றம்

மாநகராட்சி

**4.1.39.** தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம்) சட்டத்தின் 4 ஆம் பிரிவு, ஒரு நகராட்சியை ஏற்படுத்துவதற்கு பின்வரும் கூறுகள் இருத்தல் வேண்டும் என வகை செய்கிறது;

* அந்தப் பகுதியின் மக்கள் தொகை;
* அப்பகுதியின் மக்கள்தொகை நெருக்கம்;
* உள்ளாட்சி நிருவாகத்திற்கென கிடைக்கும் வருவாய்;
* வேளாண்மை சாராப் பணிகளில் வேலைவாய்ப்பின் சதவீதம்;
* பொருளாதார முக்கியத்துவம் அல்லது ஆளுநர் பொருத்தமெனக் கருதக்கூடிய ஏனைய கூறுகள்.

**4.1.40.** பேரூராட்சிகளை நகராட்சிகளாக நிலையுயர்த்துவதைப் பொறுத்தவரை சராசரி ஆண்டு வருமான அளவு ரூ.30 இலட்சமும் அதற்குமேற்பட்டும் இருக்க வேண்டும் என்ற அளவு கோலை நிறைவு செய்கின்ற பேரூராட்சிகளை மட்டுமே நகராட்சிகளாக நிலை உயர்த்தலாம் என்று பேரூராட்சிகள் இயக்குநர், கருத்துக் தெரிவித்திருந்தார். சராசரி ஆண்டு வருமானம் ரூபாய் 20 இலட்சத்திற்கு மேற்பட்டிருந்து 20, 000 மக்கள் தொகையினைக் கொண்டுள்ள பேரூராட்சிகளை, நகராட்சிகளாக நிலை உயர்த்துவது குறித்து பரிசீலிக்கலாம் என்று நகராட்சி நிருவாக இயக்குநர் பரிந்துரைத்திருத்தார். 31.3.94ஆம் நாளுடன் முடிவடைந்த கடைசி 3 ஆண்டுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டபடி, ஒரு நகராட்சியின் சராசரி ஆண்டு வருவாயின வரவு, வருவாயினச் செலவு முறையே ரூ.135 இலட்சமும் ரூ.125 இலட்சமும் ஆகும். தனிநபர் வருவாயின வரவு ரூ.194 ஆகவும், தனி நபர் வருவாயினச் செலவு ரூ.180 ஆகவும் இருக்கிறது.

**4.1.41.** ஆணையம்,மேற்சொன்ன அனைத்துக் கூறுகளையும் பரிசீலித்த பிறகு, ஒரு பேரூராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்த அல்லது ஒரு பகுதியை நகராட்சியாக அமைக்க பின்வரும் குறைந்த அளவு வரைமுறைகள் நிர்ணயிக்கப்படலாம் என்று பரிந்துரை செய்கிறது.

(i) அப்பகுதி நகர்ப்பகுதிக்குரிய தன்மையைக் கொண்டதாக இருக்க வேண்டும்; மக்கள் தொகை நெருக்கத்தைப் பொறுத்தவரை மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் கோட்பாடுகளை நிறைவு செய்வதாக இருக்க வேண்டும்; வேலை செய்யும் ஆண்களில் 75 சதவீதம் பேர் வேளாண்மையல்லாத பணிகளில் ஈடுபடுபவர்களாக இருக்க வேண்டும்;

(ii) குறைந்த அளவு மக்கட் தொகை 30,000;

(iii) சராசரி ஆண்டு வருமானம் (கடைசி மூன்றாண்டுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டது) சட்டப்படிக்கல்லாத, மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கான மானியங்கள், கடன்கள், காலங்கடந்த வைப்பீடுகள் முதலானவை நீங்கலாக ரூ.50 இலட்சத்திற்கும் மேற்பட்டிருத்தல்.

வகைப்பாடு/மறுவகைப்பாடு

**4.1.42.** 1962ஆம் ஆண்டில், சாசரி ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் நகராட்சிகள் வகைப்பாடு/மறுவகைப்பாடு செய்யப்பட்டன. பின்னர், அரசு இந்த வரைமுறைகளை 1963, 1970, 1974, மற்றும் 1983 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைத்தது.

**4.1.43.** நகராட்சிகளின் வருமானமும், செலவும் அதிகரித்ததால், நகராட்சிகளின் மறுவகைப்பாட்டிற்கான அளவுகோல்களைத் திருத்தியமைக்க வேண்டியதன் அவசியம் பற்றி, கடைசியாக, 1988ல் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 15.12.88 ஆம் நாளிட்ட 1078ஆம் எண் ஆணையில், நகராட்சிகளின் மறுவகைப்பாட்டிற்கான பின்வரும் திருத்தியமைக்கப்பட்ட வரைமுறைகளை வரையறுத்துள்ளது.

அட்டவணை 4.7 நகராட்சிகளின் வகைப்பாட்டிற்கான தற்போதைய வரைமுறைகள்

| நகராட்சியின் நிலை | கடைசி 4 ஆண்டுகளில், அனைத்து வகைக் கணக்குகளின் கீழ் கிடைத்த சராசரி அண்டு வருமானம் (மின் நிறுவனங்களின் கீழ் வரும் வருமானம் உட்பட) (ரூபாயில்) |
|---|---|
| III | 10 இலட்சம் |
| II | 20 இலட்சம் |
| I | 40 இலட்சம் |
| தேர்வுநிலை | 100 இலட்சம் |
| சிறப்பு நிலை | 200 இலட்சம் |

நகராட்சிகளின் கடைசி 4 ஆண்டுகளுக்கான மொத்த வருமானத்தைக் கணக்கிடுகையில் கடன்கள், காலங்கடந்த வைப்பீடுகள், தொடராஇன மானியங்கள் (சட்டப்படிக்கல்லாதவை) ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் அரசு தெரிவித்துள்ளது.

4.1.44. 1995 ஆம் ஆண்டில், சென்னை நகராட்சி நிருவாக ஆணையாளர், நகராட்சிகளை மறுவகைப்பாடு செய்வது தொடர்பான வரைமுறைகளை பின்வருமாறு திருத்தியமைக்கலாமென கருத்துத் தெரிவித்தார்.

அட்டவணை 4.8. நகராட்சிகளை வகைப்படுத்த நகராட்சி நிருவாக ஆணையாளர் தெரிவித்த வரைமுறைகள்

| நகராட்சியின் நிலை | வரைமுறைகள்; கடைசி 4 ஆண்டுகளில், கடன்கள், காலங்கடந்த வைப்பீடுகள், தொடராஇனமானியங்கள் (சட்டப்படியல்லாதவை) நீங்கலான சராசரி ஆண்டு வருமானம் (ரூபாயில்) |
|---|---|
| நிலைII | 50 இலட்சத்திற்கு மேல் |
| நிலை I | 100 இலட்சத்திற்கு மேல் |
| தேர்வு நிலை | 200 இலட்சத்திற்குமேல் |
| சிறப்பு நிலை | 400 இலட்சத்திற்கு மேல் |

4.1.45. ஆணையம், மேற்சென்ன அனைத்துக் கூறுகளையும் பரிசீலனை செய்த பிறகு நகராட்சிகளை வகைப்பாடு/மறுவகைப்பாடு செய்ய பின்வரும் திருத்தியமைக்கப்பட்ட வரைமுறைகள் பின்பற்றப்படலாம் என சிபாரிசு செய்கிறது.

அட்டவணை 4.9. நகராட்சிகளை வகைப்படுத்த மாநில நிதி ஆணையம் தெரிவித்த வரைமுறைகள்

| நகராட்சியின் நிலை | வரைமுறைகள் கடைசி3ஆண்டுகளின் அடிப்படையிலான சராசரி ஆண்டு வருமானம் (ரூ) |
|---|---|
| II | 50 இலட்சத்திற்கு மேல் |
| I | 100 இலட்சத்திற்கு மேல் |
| தேர்வு நிலை | 200 இலட்சத்திற்கு மேல் |
| சிறப்பு நிலை | 500 இலட்சத்திற்கு மேல் |

குறிப்பு:– சராசரி ஆண்டு வருமான அளவைக் கணக்கிட கடன்கள், காலாவதியான வைப்புத் தொகைகள், சட்டப்படிக்கல்லாத மற்றும் வளர்ச்சிப்பணி மானியங்கள் முதலியன கணக்கில் கொள்ளலாகாது.

**4.1.46.** நிலை III நகராட்சிகளின் அமைப்பு தொடர்பாக, ஆணையம் பரிந்துரை எதுவும் செய்யவில்லை. சிறப்பு நிலை பேரூராட்சிகளில் பெரும்பாலனவை ரூ.30 இலட்சத்திற்கும் அதிகமாக ஆண்டு வருமானம் பெற்று வருவதால், அவற்றை நகராட்சிகளாக நிலை உயர்த்தக் கருதும்போது அவற்றின் ஆண்டு வருமானம் ரூ.50 இலட்சமாகிவிடக்கூடும் என்பதால், ஒரு பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்த ஆண்டு வருமான அளவு ரூ.50 இலட்சம் என்று நிர்ணயிக்கப்படலாம் அப்பேரூராட்சிகளை நேரடியாகவே நிலை II நகராட்சிகளாக நிலை உயர்த்தலாம் என சிபாரிசு செய்யப்பட்டுள்ளதால், தற்போதிருக்கும் நகர்ப்பகுதிகளிலிருந்து (பேரூராட்சியிலிருந்து) புதிதாக நிலை III நகராட்சி ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு பிரகாசமாக இல்லை என்பதால், நிலை III நகராட்சிகள் பரிசீலிக்கப்பட வில்லை என்றும் நிதி ஆணையம் தெரிவிக்கிறது.

**உ. மாநகராட்சி**

**அமைத்தல்/திருத்தியமைத்தல்.**

**4.1.47.** ஒரு பகுதியை மாநகராட்சியாக அறிவிக்க சட்டங்களில் திட்டவட்டமான வழி காட்டிக் குறிப்புகள்எவையும் இல்லை; ஆனால்அவ்வாறு அறிவிக்க அரசுக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. நமது மாநிலத்தில், தற்போது 6 மாநகராட்சிகள் அதாவது சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகள் உள்ளன. அண்மையில் ஏற்படுத்தப்பட்ட திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகள், 1991ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக்கணக் கெடுப்பின்படி, முறையே 7.11. இலட்சம், 5.78 இலட்சம், 3.66 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிகள் எழுபதிலும், எண்பதிலும் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்ட போது, அவை முறையே சுமார் 6 இலட்சம், 7 இலட்சம் மக்கள் தொகையினைக் கொண்டிருந்தன. 31.3.1994ஆம் நாளுடன் முடிவடையும் கடைசி 3 ஆண்டுகளின் அடிப்படையிலான இம்மாநகராட்சிகளின் சராசரி ஆண்டு வருவாயின வரவுகளும், வரவாயினச் செலவுகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.10** அணைத்து மாநகராட்சிகளின் சராசரி ஆண்டு வருமானம் மற்றும் செலவு குறித்த விவரங்கள்.

| | மாநகராட்சியின் பெயர் | சராசரி ஆண்டு வருமானம் வரவு | சராசரி ஆண்டு வருமானம் செலவு (ரூபாய் கோடியில்) | தனிநபர் வருமானம் வரவு | தனிநபர் வருமானம் செலவு (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| (i) | சென்னை | 164.77 | 103.44 | 428.93 | 269.27 |
| (ii) | மதுரை | 19.55 | 21.48 | 207.79 | 228.29 |
| (iii) | கோயம்புத்தூர் | 32.04 | 19.56 | 392.52 | 239.59 |
| (iv) | திருச்சிராப்பள்ளி | 12.51 | 10.58 | 187.13 | 158.19 |
| (v) | சேலம் | 10.75 | 10.54 | 181.03 | 177.52 |
| (vi) | திருநெல்வேலி | 5.24 | 2.08 | 140.04 | 55.45 |
| | மொத்தம் | 244.86 | 167.68 | 338.43 | 255.07 |

இம்மாநிலத்தில், வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி போன்ற ஏனைய பெரிய நகரங்கள், முறையே 3.10 இலட்சம், 3.57 இலட்சம், 3.05 இலட்சம், 2.84 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. நகர்மயமாக்கல் குறித்த தேசிய ஆணையம் மத்திய அரசுக்கு அளித்த பரிந்துரைகளில் மாநகர்கள் தொடர்பாக பின்வரும் வகைப்பாடுகளைப் பின்பற்றியுள்ளது. 100 இலட்சம் மக்கள் கொண்ட மாநகர் உயரிய நிலையைச் சேர்ந்தது (C6) 5 இலட்சம் மக்கள் தொகைக் கொண்ட மாநகர் கீழ் நிலையைச் சேர்ந்தது (C1) * மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகளை ஏற்படுத்துவதற்கு பின்பற்றப்பட்ட வரைமுறைகளைக் கருத்திற் கொண்டும், நகர்மயமாக்கல் குறித்த தேசிய ஆணையம்அளித்த பரிந்துரைகளைக் கருத்திற் கொண்டும், மாநில நிதி ஆணையம் மாநகராட்சியினை ஏற்படுத்த அல்லது நகராட்சிஒன்றை மாகராட்சியாக நிலை உயர்த்த, குறைந்தது 10 இலட்சம் மக்கள் தொகை இருக்க வேண்டும் என்ற வரைமுறையை நிர்ணயிக்கலாம் என்று பரித்துரை செய்கிறது. வருமான அளவுகோலைப் பொறுத்தவரையில், குறைந்த அளவு வருமானம் ரூ.50 கோடியாக இருக்க வேண்டும் என்றும் ஆணையம் பரிந்துரைக்கிறது.

**4.1.48.** ஆகவே, மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரை செய்கிறது.

ஒரு மாநகராட்சி அமைக்க அல்லது ஒரு நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்த பின்வரும் அளவுகோல்கள் இனி வருங்காலத்தில் பின்பற்றப்படலாம்:

(i) குறைந்த அளவு மக்கள் தொகை 10 இலட்சம்
(ii) சராசரி ஆண்டு வருமானம் ரூ.50 கோடி

**ஊ. நகரியங்கள்**

**4.1.49.** தமிழ்நடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் இயற்றப் படுவதற்கு முன்பாக, தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ் நகரியங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவை, நகராட்சி நகரியங்கள் என்று அழைக்கப்பட்டன. தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்ட பிறகு கல்வி, தொழில், தொழிலாளர்கள் குடியிருப்பு, மலை வாசஸ்தலம் உள்ள பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளுக்கென நகரியங்களை ஏற்படுத்த வகைசெய்யும் குறிப்பிட்ட பிரிவு ஒன்று அதாவது பிரிவு 4, சேர்க்கப்பட்டது. இந்த நகரியங்கள் ஊராட்சி நகரியங்கள் என்று அழைக்கப்பட்டன. நகரிய அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள், அரசால் நியமனம் செய்யப்பட்டனர். நகராட்சி நகரியக்குழுக்களுக்கு மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும் ஊராட்சி நகரியக்குழுக்களுக்கு, மாவட்ட ஆட்சியர்/கோட்டாட்சியரை தலைவராகவும் அரசு நியமனம் செய்தது. தற்போது, 8 நகராட்சி நகரியக்குழுக்கள் இருக்கின்றன அவற்றில் 5 நகராட்சி நகரியக்குழுக்கள், தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டவை, எஞ்சிய 3 நகராட்சி நகரியக்குழுக்கள், அதாவது குற்றாலம், பவானிசாகர், மேட்டூர் ஆகியவை தனிச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டவை. இவற்றையடுத்து, தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் விதிமுறைகளின்படி, 17 நகரியக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. நகராட்சிச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட நகரியக்குழுக்களின், நிருவாக அதிகாரிகளாக நகராட்சி ஆணையர்கள் நியமனம் செய்யப்பட்டனர். ஊராட்சி நகரியக்குழுக்களுக்குப் பேரூராட்சிகளின் நிருவாக அதிகாரிகள், நிருவாக அதிகாரிகளாக நியமனம் செய்யப்பட்டனர்.

**4.1.50.** தொழிற்சாலைகள் அல்லது சுற்றுலா தலங்கள் மிகுதியாக அமைந்துள்ள பகுதிகளுக்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் நகராட்சி நகரியங்கள், அதிக அனுபவம் வாய்ந்த நகராட்சி ஆணையர்களின் நிருவாகப் பொறுப்பில் இருக்க வேண்டும் என்றும், நிருவாக அதிகாரிகளை நியமனம்

செய்வதற்காக, நகரியங்களை வகைப்படுத்துகையில், அவற்றை வேறுபட்ட வகையாகக் கருத வேண்டும் என்றும் குறிப்பிட்டு, நகராட்சி நிருவாக இயக்குநர் 1973ஆம் ஆண்டில் அரசுக்குச் செயற்குறிப்புகளை அனுப்பியிருந்தார். அதன்படி, நகராட்சி நகரியங்களை கீழே குறிப்பிட்டுள்ளவாறு வகைப்படுத்தலாம் என்றும் அவர் பரிந்துரைத்திருந்தார்.

**அட்டவணை 4.11. நகராட்சி நகரியங்களை வகைப்படுத்துவதற்கான தற்போதைய வரைமுறைகள்**

| நகரியத்தின் நிலை | வகைப்பாட்டிற்கான வரைமுறைகள். பொதுகணக்கு சாதாரணமானது என்பதன் கீழ்ஆண்டு வருமானம் (ரூ.) |
|---|---|
| நிலை II | 5 இலட்சமும் அதற்குக் குறைவாகவும் |
| நிலை I | 5 இலட்சத்திற்குமேல் ஆனால் 10 இலட்சத்திற்கு மேற்படாமல் |
| தேர்வுநிலை | 10 இலட்சத்திற்கு மேல். |

அரசு, இந்தச் செயற்குறிப்பை ஏற்றுக் கொண்டு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் 6.3.1975 ஆம் நாளிட்ட, 380 ஆம் எண் அரசாணையில் அதற்கேற்ப உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. ஊராட்சி நகரியங்களைப் பொறுத்தவரையில், வகைப்பாடுகள் ஏதுவுமில்லை. பேரூராட்சிகளின் நிருவாக அதிகாரிகள் முன்னரே குறிப்பிட்டவாறு பேரூராட்சிகள் இயக்குநரால் நியமனம் செய்யப்பட்டனர்.

**4.1.51.** அரசியலமைப்புச் சட்டத்தின் 74ஆம் திருத்தத்திற்குப் பிறகு, நகராட்சி நகரியங்களும், ஊராட்சி நகரியங்களும் 1994 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம்) சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு, அச்சட்டத்தின் 4 (B) பிரிவின்படி, முறையே, நகராட்சிகள் என்றும், பேரூராட்சிகள் என்றும்அழைக்கப்பட்டன.

**4.1.52.** 1992 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் (74ஆம் திருத்தம்) சட்டத்திற்கிணங்கவும், 1994 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம்) சட்டத்தின் 4(A) பிரிவின் படியும். தொழிற்சாலைப்பகுதிகளுக்கென புதிய நகரியங்களை ஏற்படுத்த வகைசெய்யப்பட்டுள்ளது. அதன்படி, ஆளுநர் அவர்கள் தொழில் நிறுவனம் அமைந்திருக்கும் பகுதியின் அளவு, அப்பகுதியிலுள்ள தொழில் நிறுவனம் அளித்து வருகின்ற அல்லது அளிக்க கருதியுள்ள நகராட்சிப்பணி, மற்றம் அவர் பொருத்தமெனக் கருதக்கூடிய ஏனைய கூறுகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, ஏதேனும் ஒரு நகராட்சிப்பகுதிக்குட்பட்ட நகர்ப்பகுதியை அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதியை அறிவிக்கையின் மூலம் தொழில் நகரியமாக அறிவிக்கலாம். அத்துடன் அந்நகரியத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, அவர்களைத் தேர்ந்தெடுக்கம் முறை, தலைவர் பதவிக்காலம், அந்நகரியக்குழுவின் நடைமுறை, வரையறை மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணியாற்ற வேண்டிய விவரங்கள் முதலியனவும் அந்த அறிவிக்கையில் குறிப்பிட வேண்டும்; திட்டவட்டமான அளவுகோல்களைக் கொண்டு அமைக்கப் பட்ட இந்த அமைப்புகளின் தனி நபர் வருமானத்தில் காணப்படும் இயல்பை மீறிய தன்மை, இவற்றை ஏனைய நகராட்சிகள்/பேரூராட்சிகளுக்கு நிகராக கருதும்போது நிதிகளைப் பகிர்ந்தளிப்பதற்குரிய வரைமுறைகளை வெகுவாகப் பாதிப்பதால், இது இன்றியமையாததாகிறது.